# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். கமுதி

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., B.Sc., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர். கமுதி**

**2025 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 28 ம் நாள் வியாழக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 285/2023**
**CNR. NO. TNRM070062452023**

| | | |
|---|---|---|
| 1. | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | பேரையூர் காவல்நிலையம் குற்ற எண் – 135/2020 |
| எதிரியின் விபரம் | | |
| 2. | பெயர் | சதீஸ் |
| 3. | த/பெ. | சேகர் |
| 4. | தொழில் | கூலி |
| 5. | முகவரி | பாக்குவெட்டி, கமுதி தாலுகா |
| 6. | வயது | 23/20 |
| 7. | சம்பவ நாள் | 09–08–2020 ம் தேதி 12.30 மணி |
| 8. | புகார் தேதி | 09–08–2020 ம் தேதி 16.30 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 09–08–2020 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 19–08–2020 |
| 11. | கமிட்டல் உத்தரவு | இல்லை |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 12–12–2023 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 28–08–2025 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | இதச பிரிவு 379 ன் கீழ் |



THANGA KARTHIKA

EX p1 through Pw1

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2025.08.28 16:04:37 +0530

| | | |
|---|---|---|
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | இதச பிரிவு 379 ன் கீழ் |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சிகள் / முதல் விசாரணை / குறுக்கு விசாரணை<br>அ.சா.1 / 11.08.2025 / 11.08.2025<br>அ.சா.2 / 11.08.2025 / 11.08.2025<br>அ.சா.3 / 11.08.2025 / 11.08.2025<br>அ.சா.4 / 11.08.2025 / 11.08.2025<br>அ.சா.5 / 19.08.2025 / 19.08.2025 |
| 17. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 28-08-2025 |
| 18. | எதிரி தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 19. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச 311 பிரிவின் படியான மனுக்கள் | இல்லை |
| 20. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு. பி.எம்.முனியாண்டி |
| 21. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு. K. அய்யாத்துரை |
| 22. | எதிரியின் கூற்று | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 23. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 28-08-2025 |
| 24. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 28-08-2025 |

Inner table for item 16:

| சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 11.08.2025 | 11.08.2025 |
| அ.சா.2 | 11.08.2025 | 11.08.2025 |
| அ.சா.3 | 11.08.2025 | 11.08.2025 |
| அ.சா.4 | 11.08.2025 | 11.08.2025 |
| அ.சா.5 | 19.08.2025 | 19.08.2025 |



THANGA KARTHIKA
EX p1 through Pw1
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2025.08.28 16:04:43 +0530

| | | |
|---|---|---|
| 25. | நீதிபதியின் முடிவு | முடிவாக, எதிரி இதச பிரிவு 379 ன் படி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.<br>இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த வழக்கு 24–08–2023ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 28–08–2025ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை – 1 திரு.பி.எம்.முனியாண்டி அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. அய்யாதுரை., B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(28.08.2025)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

**<u>தீர்ப்புரை</u>**

**1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : –**

புகார்தாரராகிய செல்லப்பாண்டி என்பவர் 09.08.2020ம் தேதி 12.30 மணிக்கு அ.சா.2 உடன் கொரோனா தடுப்பு சம்மந்தமாக பாக்குவெட்டி மலட்டாறு ஆற்றுப்படுகையில் நேரடி கள ஆய்வு செய்து கண்காணித்து வரும்போது

எதிரியானவர் எந்தவித அரசு அனுமதியும் இல்லாமல் சுயலாபம் சம்பாதிக்கும் நோக்கத்தில் திருட்டுத்தனமாக பாக்குவெட்டி மலட்டாற்றில் உள்ள மணலை TN-65-AW-3070 என்ற டிராக்டரில் 30 மணல் மூட்டைகளில் 0.28 யூனிட் மணலை ஏற்றிக்கொண்டு ரூ.375/- அரசுக்கு இழப்பு ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 379 ன் கீழ் கமுதி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு குவிமுச பிரிவு 207-ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்ட பின்பு எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 379 ன் கீழான குற்றம் பற்றி வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்தார். வழக்காவணங்களை பரிசீலித்தும் இரு தரப்பு வாதங்களை கேட்டும், முதல் நோக்கு வழக்கு இருந்த காரணத்தினால், எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 379 ன் கீழ் குறிப்பான குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவிய போதும் எதிரி அவர் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து குவிமுச.313(1)(ஆ) பிரிவின் படி கேள்விகள் கேட்க எதிரி சாட்சியங்களை பொய் என்றும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.



THANGA KARTHIKA
EX p1 through Pw1
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2025.08.28 16:04:57 +0530

5. <u>**தீர்வுக்குரிய பிரச்சனை :–**</u>

i. எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 379ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்ககூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

iii. இரு தரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6. அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக நிருபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:–**

i. அசா.1 இவ்வழக்கின் நிகழ்வுநிலை புகார்தாரரும், கிராம நிர்வாக அலுவலரும் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் 09.08.2020ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் கிராம உதவியாளர் மலைச்சாமி (அ.சா.2) என்பவருடன் அலுவல் ரீதியாக பாக்குவெட்டி கிராமத்திற்கு சென்றபோது மலட்டாறு பகுதியில் காட்டுக் கருவேல் மரங்களுக்குள் ஒரு டிராக்டர் நின்று கொண்டிருந்துள்ளது. அங்கு சென்று டிராக்டரை பார்வையிட்டபோது எதிரி அந்த டிராக்டரின் டிரைவர் சீட்டில் அமர்ந்திருந்ததாகவும், டிராக்டரில் மணல் இருப்பதுபோன்று தெரியவந்ததால் எதிரியிடம் வினவியபோது அவர் குப்பைகளை அள்ளிக்கொண்டு செல்வதாக கூறியுள்ளார். எனவே, மூட்டைகளை பிரித்து காண்பிக்குமாறு எதிரியிடம் கேட்டவுடன் எதிரி அதை பிரித்து காண்பித்தபோது மணல் இருந்துள்ளது.

ii. மேலும், அ.சா.1ன் சாட்சியத்தின்படி அந்த டிராக்டரில் 30 மூட்டைகளில் அவ்வாறு மணல் இருந்ததாகவும், அது குறித்து எதிரியிடம்

விசாரித்தபோது மலட்டாறு ஆற்றுப்படுகையில் மணல் அள்ளியதாக கூறியதால் பேரையூர் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லிவிட்டு எதிரியையும், டிராக்டரையும் காவல் நிலையம் கொண்டு சென்று எதிரி மீது புகார் அளித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், காவல் நிலையத்தில் வைத்து போலீசார் எதிரியை விசாரித்தபோது ஒப்புதல் வாக்குமூலம் எதிரி அளித்ததாகவும் அதில் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், பின்னர் கைப்பற்றுதல் மகஜரிலும் கையொப்பம் செய்ததாகவும், ஆனால் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் எதற்காக செய்யப்பட்டது என்று நினைவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

iii. அ.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் டிராக்டரில் மணல் அள்ளுவதற்கான மண்வெட்டி ஒன்று இருந்ததாகவும், ஆனால் அதைப்பற்றி புகாரிலோ, போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றாலும், மண்வெட்டியோடு சேர்த்து டிராக்டரை நிலையத்தில் ஒப்படைத்தாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், டிராக்டர் வாகனத்தை எதிரியே நிலையத்திற்கு எடுத்து வந்ததாக கூறியுள்ளார். இவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தன் முன்னிலையில் போலீசார் எதிரியை விசாரிக்கவில்லை என்றும், டிராக்டர் கைப்பற்றப்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, இவர் முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தை தன் முன்னிலையில் அளித்ததற்கு சாட்சி கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு பிறகு குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தன் முன்னிலையில் வைத்து எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்று மாற்றி கூறியுள்ளார். எனவே இவரது சாட்சியம் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளதாலும், போலீசார் தன் முன்னிலையில் எதையும் கைப்பற்றவில்லை என்று சாட்சியம்

 THANGA KARTHIKA
EX p1 through Pw1
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2025.08.28 16:05:09 +0530 

அளித்துள்ளதாலும், மண்வெட்டி பற்றி புதியதாக தற்போது குறுக்கு விசாரணையில் மட்டுமே கூறியுள்ளதாலும், அது பற்றி புகாரிலும், போலீசார் விசாரணையிலும் கூறாததற்கு காரணம் தெரிவிக்கப்படததாலும், இவரது சாட்சியம் நம்பத்தகுந்ததாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

iv. அசா.2 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியாக சாட்சிப் பட்டியலில் சேர்க்கப்பட்டவர் ஆவார். இவரது சாட்சியத்தில் அ.சா.1 யை கிராம நிர்வாக அலுவலர் என்ற முறையில் தெரியும் என்றும், 2020 ம் ஆண்டு ஒரு நாள் மதியம் சுமார் 12.00 மணியளவில் அ.சா.1 வுடன் அலுவல் ரீதியாக மலட்டாறு பகுதிக்கு சென்றபோது அங்கு ஒரு டிராக்டர் நின்று கொண்டிருந்ததாகவும், அதில் எதிரி ஓட்டுநராக இருந்ததாகவும், இது குறித்து பேரையூர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தாகவும், போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து டிராக்டரையும், எதிரியையும் நிலையம் கொண்டு சென்றதாகவும், பின்னர் நிலையத்தில் வைத்து போலீசார் தன்னிடம் இரு கையொப்பம் பெற்றதாகவும், ஆனால் அந்த கையொப்பங்கள் எதற்காக செய்யப்பட்டது என்று நினைவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, வழக்கு தடயம் கைப்பற்றப்பட்டது குறித்து இவரது சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

v. அசா.3 மற்றும் அ.சா.4 பார்வை மகஜர் சாட்சிகளாக சாட்சிப் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்கள் ஆவாகள். இவர்கள் தங்களது சாட்சியத்தில் அ.சா.1 யைத் தெரியாது என்றும், ஊர்க்காரர் என்ற முறையில் எதிரியை மட்டும் தெரியும் என்றும், வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே இவர்களது சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என்றும், சம்பவம் குறித்து போலீசார் சம்பவ இடத்தில் விசாரித்தார்களா

என்பது பற்றி நம்பும்படியான சாட்சியம் அளிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

vi. அசா.5 பேரையூர் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆவார். இவரது சாட்சியத்தின் படி வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு. செல்வம் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.மாரிமுத்து ஆகியோர்களின் கையொப்பங்கள் ஆவணங்கள் அடிப்படையில் பரிச்சயம் என்றும், அதன் பேரில் சாட்சியம் அளிப்பதாகவும் கூறி கடந்த 09.08.2020ம் தேதியன்று 16.30 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.மாரிமுத்து அவர்கள் நிலையப் பொறுப்பில் இருந்தபோது பாக்குவெட்டி குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு.செல்லப்பாண்டி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையக்குற்ற எண்.135/2020 இ.த.ச. பிரிவு 379 மற்றும் Sec 21(1) Mines and Minerals (Development and Regulation) Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.6) பதிவு செய்து அன்றே வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அசா.ஆ.7) மற்றும் மாதிரி வரைபடம் (அசா.ஆ.8) தயார் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

vii. மேலும், அ.சா.5 தனது சாட்சியத்தில் சம்பவயிட சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரியைத் தேடி வந்த நிலையில் அன்றே 16.45 மணியளவில் காவல் நிலையத்தின் முன்பு வைத்து கைது செய்து விசாரித்துபோது எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.1 மற்றும் அ.சா.2 முன்னிலையில் பதிவு செய்தும், எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், குற்றச் சம்பத்தில் பயன்படுத்திய டிராக்டர் வாகனத்தை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் (அ.சா.ஆ.9)

செய்தும், பின்னர் பணிமாறுதல் உத்தரவு வந்தபடியால் வழக்கு கோப்பை காவல்நிலையத்தில் ஒப்படைத்துச் சென்றதாகவும், பின்னர் நிலையப் பணிப் பொறுப்பேற்ற சார்பு ஆய்வாளர் திரு.செல்வம் என்பவர் வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கில் கைப்பற்றப்பட்ட மணலின் மதிப்பை அறியும் பொருட்டு கமுதி குண்டாறு வடிநில பிரிவு உதவி செயற்பொறியாளர் திரு.செல்வராஜ் முன்பாக ஆஜர் செய்து ஆற்று மணலை மதிப்பீடு செய்து மணல் மதிப்பீடு சான்று (அ.சா.ஆ.10) பெற்றதாகவும், அன்றே திருடிய மணல் குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டதால் வழக்கின் சட்டப்பிரிவுளான இ.த.ச. பிரிவு 379 மற்றும் 21(1) Mines and Minerals (Development and Regulation) Act என்பதிலிருந்து இ.த.ச. பிரிவு 379–ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ 11) தயார் செய்து அன்றே வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

viii. மேற்படி, அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் இரு தரப்பு வாதங்களை பரிசீலிக்கையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியங்களிடையே முரண்பாடு இருப்பதாலும், அ.சா.1 ன் சாட்சியம் நம்பத்தகுந்தது இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளதாலும், அ.சா.2 ன் சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என்பதாலும், எதிரியிடம் இருந்து தடயம் கைப்பற்றப்பட்டதா என்பது குறித்தும், சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்பது குறித்தும் நம்பும்படியான சாட்சியம் அளிக்கப்படவில்லை என்பதால் எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 379 ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கபடவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

ix. மேலும், சம்பவ இடத்திற்கு அருகே உள்ள உள்ளூர்க்காரர்களை சாட்சியாக அழைக்கவில்லை என்று கூறியுள்ளதாலும், இந்நீதிமன்றம் ஏற்கனவே அரசுத் தரப்பு வழக்கின் படி வாகனம் கைப்பற்றப்பட்டதா என்பது குறித்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியம் நம்பத்தகுந்ததாக இல்லை என முடிவு செய்துள்ளதாலும், சம்பவ இடத்தில் சம்பவம் குறித்து விசாரிக்கப்பட்டதா என்பது பற்றி நம்பும்படியான சாட்சியம் அளிக்கப்படவில்லை என்பதாலும், அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 379 ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கபடவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

x. இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரி இந்திய தண்டனை சட்டம் பிரிவு 379 ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

xi. இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால்

EX p1 through Pw1

THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2025.08.28 16:05:32 +0530

கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28ம் நாள் வியாழக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA
EX p1 through Pw1
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2025.08.28 16:05:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. செல்லப்பாண்டி |
| அ.சா.2 | திரு. மலைச்சாமி |
| அ.சா.3 | திரு. சின்ன பெருமாள் |
| அ.சா.4 | திரு. ஆனந்த் |
| அ.சா.5 | திரு. சுரேஷ்குமார் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 11-08-2025 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 11-08-2025 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 11-08-2025 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 11-08-2025 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | 11-08-2025 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.6 | 19-08-2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 19-08-2025 | பார்வை மகஜர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.8 | 19-08-2025 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.9 | 19-08-2025 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.10 | 19-08-2025 | மணல் மதிப்பீடுச் சான்று |
| அ.சா.ஆ.11 | 19-08-2025 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருள்:-** இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:-** இல்லை

**குறிப்பு :-**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA

EX p1 through Pw1
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2025.08.28 16:05:48 +05'30'

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கமுதி.